# மாணவர் மேன்முறையீடு (STUDENT'S APPEAL) தொடர்பான அறிவுறுத்தல்கள்

## ( From Batch VI onwards)

மாணவர்கள் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் காரணங்களின் நிமிர்த்தம் மேன்முறையீடுகளை (Appeals) மேற்கொள்ள முடியும்.

1. **பரீட்சை சார்ந்த மேன்முறையீடுகள்**

மருத்துவ அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்திற்காக பரீட்சைக்கு சமூகமளிக்காது இருத்தல். மாணவர்கள் தங்களது அணியுடன் உரிய பரீட்சைக்கு சமூகமளிக்காத போது மேன் முறையீட்டுப் படிவம் சமர்ப்பிக்காமல் அடுத்த அணியுடன் மீள் பரீட்சை எழுதும் போது ஆகக் கூடியது "C+" பெறுபேறு மட்டுமே பெறமுடியும். மருத்துவ அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்திற்காக பரீட்சைக்கு சமூகமளிக்காத போது மாணவர்கள் பரீட்சை முடிவடைந்து 14 நாட்களுக்குள் உங்களுடைய மேன் முறையீட்டுப் படிவங்களை "Department of Commerce" க்கு சமர்ப்பித்தல் வேண்டும். 14 நாட்களுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் மேன் முறையீட்டுப் படிவங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் உங்களால் அனுப்பப்படும் மருத்துவ சான்றிதழ்கள் பல்கலைக்கழக வைத்திய அதிகாரியால் (University Medical Officer) பரிந்துரைக்கப்படாத பட்சத்திலும் உங்கள் மேன் முறையீடுகள் நிராகரிக்கப்படும்.

Note: - நாடளாவிய ரீதியில் உள்ள மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் `வழக்கமான வைப்புச் சீட்டைப் பயன்படுத்தி ரூ. 500 இனைச் செலுத்தவும்.

சீட்டில் உங்கள் தனிப்பட்ட தகவலை நிரப்பவும் மற்றும் கணக்கு எண்ணுக்கு பதிலாக குறிப்பு எண்ணைப் ( Reference Number – 890002340000446 ) பயன்படுத்தவும். பணம் செலுத்துவதற்கான காரணம்: மருத்துவச் சான்றிதழின் சமர்ப்பிப்பு -CODL

பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்கு முன், சீட்டின் புகைப்பட நகலை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

- மாணவர்கள் தங்களது அணிக்கான உரிய பரீட்சை நடைபெற்றதில் இருந்து அடுத்து வரும் மூன்று அணிகளுடன் மட்டுமே மேன் முறையீட்டுப் படிவம் சமர்ப்பிக்காமல் மீள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். அதன் பின்னர் மீள் பரீட்சைக்கு அனுமதி பெற மேன் முறையீட்டுப் படிவம் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

- மாணவர்கள் பதிவு செய்ததிலிருந்து ஏழு வருடங்களுக்குள் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தல் வேண்டும். ஏழு வருடங்களுக்கு பின்னர் தகுந்த காரணங்கள் உள்ள பட்சத்தில் மட்டுமே பட்டப்படிப்பை தொடரவும் அல்லது மீள் பரீட்சைக்கு தோற்றவும் அனுமதிபெற மேன் முறையீட்டுப் படிவம் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

2. **தகுந்த காரணத்துடன் படிப்பை இடைநிறுத்தியிருத்தல்**

மாணவர்கள் மருத்துவ அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்திற்காக பட்டப்படிப்பை இடைநிறுத்தியிருந்தால் மறுபடியும் பட்டப்படிப்பை தொடர்வதற்கு அனுமதி பெற மேன் முறையீட்டுப் படிவம் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

3. **தகுந்த காரணத்துடன் வேறு ஏதாவது வேண்டுகோள்கள்**

- மாணவர்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட இரு காரணங்களும் தவிர்ந்த வேறு ஏதாவது வேண்டுகோள்கள் இருந்தாலும் மேன் முறையீட்டுப் படிவம் சமர்ப்பிக்க முடியும்.

- மேற்குறிப்பிடப்பட்ட மேன் முறையீடுகள் வணிக அலகின் கல்விச் சபை, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட சபை மற்றும் பல்கலைக்கழக மூதவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே பட்டப்படிப்பைத் தொடரவோ அல்லது மீள் பரீட்சையில் தோற்றவோ முடியும்.

Note: மேன் முறையீட்டுப் படிவங்கள் இல்லாமல் உங்களால் அனுப்பப்படும் கடிதங்கள் (Letters) மேன் முறையீடாக (Appeal)

ஏற்றுக்கொள்ளபடமாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

பூரணப்படுத்தப்பட்ட மேன் முறையீட்டுப் படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:


Academic Coordinator,

B.Com Degree Programme,

Department of Commerce,

University of Jaffna,

Sri Lanka.

இணைப்பாளர்,

வணிகமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம்,

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,

இலங்கை